**செப்டம்பர் - 29**

**"மனமேட்டிமையுள்ளவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன்." - நீதி 16 : 5.**

கிறிஸ்தவனின் கடும் பரீட்சைகளில் ஒன்று பெருமையின் தலைமையின் கீழ் கிரியை செய்கிற உலகத்தனத்தின் ஆவியின் ஆசையை ஜெயங்கொள்ளுவதாகும். இவ்வுலக சம்பந்தமான பெருமை தேவனிடத்திலுள்ள விசுவாசத்தையும், அவருக்குக் கீழ்ப்படிதலையும் எதிர்க்கிறது. யார் திடமானதாயும், கர்த்தரில் முழு நம்பிக்கையுள்ளவர்களாயும் இருக்கிறார்களோ, அவர்களே இந்த இராட்சதனை வெல்ல முடியும். வெற்றி பூரணமாக இருக்க வேண்டியது அவசியமானதாயும் இருக்கிறது. அதாவது பெருமை ஒருபோதும் திரும்பவும் நம்மை அழிக்க எழுந்திராவண்ணம் முடிவாக அதை இழிவுபடுத்தி அதற்கு ஒரு முடிவுகட்ட வேண்டும். இது ஒரு தனிப்பட்டவருடைய போர். இந்த இராட்சதனுக்கு எதிராக உபயோகிக்க வேண்டிய தகுந்த ஒரே போர் தளவாடம் ஆற்றிலிருந்து எடுக்கிற ஒரு கூழாங்கல், அதாவது எது அவருடைய பார்வையில் பிரியமானதாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் இருக்கிறதென்பதைக் காட்டுகிறதும், தன்னைத்தான் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்றும், தன்னைத்தான் உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் என்றும் நிச்சயப்படுத்துகிறதுமான கர்த்தரின் செய்தி கவி சொல்லியிருக்கிற பிரகாரமாய், "எங்கே பெருமை பாராட்டுதல் முடிகிறதோ! அங்கே உண்மையான கண்ணியம் ஆரம்பமாகிறது." **- Z ’03, 329 (R 3230).**

மிகைப்படுத்தப்பட்ட சுய கௌரவமே பெருமை (தன்னையே உயர்வாக மதித்தல்) ஒரு அகந்தை கொள்கிற சுய மரியாதையிலும், தன்னம்பிக்கையிலும், சுய திருப்தியிலும், தற்புகழ்ச்சியிலும் பெருமை தன்னையே வெளிப்படுத்தலாம். தன் இருதயத்தில் பெருமையுள்ளவனாய் இருக்கிற ஒருவன் மற்றவர்களில் இந்தக் குணங்கள் இடைவிடாமல் நிந்தித்தாலும் தன்னிலே இந்தக் குணங்கள் இருக்க ஆசைப்படுகிறான். இப்படிப்பட்ட ஆவி மற்றவர்களை அவமதிக்க நடத்துகிறது. ஒரு கிறிஸ்தவனுக்கு இது மிகவும் ஆபத்தான குணங்களில் ஒன்றாகும். எல்லா நல்வார்த்தையிலும், கிரியையிலும் அது ஒருவனை தகுதியற்றவனாக்குகிறது. அது ஒருவனை தேவனிலிருந்தும், கிறிஸ்துவிலிருந்தும், தன்னுடைய உடனாளியிடமிருந்தும் அன்புப் பிணையறுக்கிறது. தேவன் இப்படிப்பட்டவர்களை தம்முடைய காரியங்களுக்காக உபயோகப்படுத்த முடியாது. அவர் அவர்களுடைய தீய இருதயங்களை அறிந்து அவர்களை எதிர்த்து அவர்களைப் பக்கமாய்த் தள்ளிவிடுகிறார். அவர்கள் திருத்த முடியாதவர்கள் என்று நிரூபிக்கப்பட்ட பிறகு அவர்களை முற்றிலுமாக ஏற்க மறுத்து அவர்களை வெறுக்கிறார்.

**- P ’32, 136.**

**ஒத்த வாக்கியங்கள் :-**

**1சாமு 2:3; சங் 10:2-7,11; நீதி 3:32; 6:16-19; 11:20; 12:22; 15:8,9,26; 21:27;24:9; 28:9; 29:27; எரே 9:23,24; 13:15; மாற் 7:21,22; 2தீமோ 3:2; யாக் 4:6; 1யோவா 2:16.**

**கோபுர வாசிப்பு : : Z ’12, 110 (R 5000).**

**வினாக்கள் : இந்த வாரத்தில் நான் என் இருதயத்தில் பெருமை கொண்டிருந்தேனா? அல்லது தாழ்மையுடனிருந்தேனா? நான் எவ்வாறு அப்படியானேன்? பலன்கள் என்ன?**